# தமிழ் இலக்கியத்தில் இறைநெறிகள்

பதிப்பாசிரியர்கள்

முனைவர் ந. ஜெயசுதா

முனைவர் ம. பிரகாஷ்

தமிழ்த்துறை (சுயநிதி)
என்.ஜி.எம். கல்லூரி
பொள்ளாச்சி.

# தமிழ் இலக்கியத்தில் இறைநெறிகள்

## (பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)

பதிப்பாசிரியர்கள்

முனைவர் ந. ஜெயசுதா
முனைவர் ம. பிரகாஷ்

**தமிழ்த்துறை**
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி
(தன்னாட்சி, தேசிய மீள்தர மதிப்பீடு & மதிப்பேற்றுக்
குழுவின் 'ஏ' தகுதி ஐ.எஸ்.ஓ.
9001:2015 தரச்சான்றிதழ் பெற்றது)
பொள்ளாச்சி - 642 001

# தமிழ் இலக்கியத்தில் இறைநெறிகள்

## (பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)

பதிப்புக்குழு
முனைவர் த.பரமேசுவரி(துறைத்தலைவர்),
முனைவர் த. கீதாஞ்சலி,
முனைவர் இரா.விஷ்ணுப்பிரியா,
முனைவர் ம. சித்திரகலா, முனைவர் ந. பிரகாஷ்,
முனைவர் மு. சுகந்தி, முனைவர் இரா. ஜெயந்தி,
பேரா. ர.சூர்யா, பேரா. அ. மகபூபு.

முதற்பதிப்பு : டிசம்பர், 2018

வெளியீடு : டுடே பதிப்பகம்
192, பெல்ஸ் சாலை,
சேப்பாக்கம், சென்னை - 600 005.

கணினி : டுடே கிராபிக்ஸ்

அச்சாக்கம் : டுடே பிரிண்டர்ஸ்
14/192, பெல்ஸ் ரோடு,
எஸ்.ஆர். காம்ப்ளக்ஸ், சென்னை-05.
அலைபேசி:98400 83738 / 044-2855 3797

பக்கங்கள் : xxiii + 483 = 506

விலை : ரூ.420/-

ISBN : 978-93-87882-47-8

49. தமிழ்ச் சமூக வரலாறு: முருகனின் பரிமாணங்கள்
முனைவர் ம. பிரகாஷ் 320

50. பட்டினத்தார் பாடல்களில் இறையுணர்வு
ப. பிரதாப் 326

51. திருக்காளத்திப்புராணம் காட்டும் கண்ணப்பரின் இறைநெறி
ப. பிரியா 333

52. பெரியபுராணமும் : விவிலியம் காட்டும் இறைநெறிகள்
பா. பூங்காவனம் 338

53. விவிலியம் காட்டும் இறைநெறி
கு. பெர்சியா ஜீவபாய் 343

54. டி. செல்வராஜ் நாவல்களில் இறைநெறி
முனைவர் பி. மஞ்சுளா 348

55. சமயங்கள் வளர்த்த தமிழ்
அ. மகபூபூ 358

56. தமிழ் இலக்கியங்களில் இறைநெறி
முனைவர் ச. மதுரா 364

57. சங்ககால நாடறி நன்மணமும் தாலியும்
முனைவர் த. மலையரசி 369

58. திருமுருகாற்றுப்படையும் இறைநெறியும்
முனைவர் மு.தேவராஜ் 374

59. திரு.வி.க.வின் பொதுமை நோக்கிய சைவம்
பேராசிரியர் ப. மகாலிங்கம் 383

60. இலக்கியத்தில் ஆழ்வார்களின் இறைநெறி
முனைவர் பே. மகேஸ்வரி 389

61. இராமலிங்க அடிகளாரின் திருவருட்பா உணர்த்தும் இறைநெறி
பேராசிரியர் முனைவர் வே. மாணிக்கம்மாள் 396

62. திருவள்ளுவரின் கடவுள் கொள்கை
முனைவர் முகில்லை இராசபாண்டியன் 402

63. சிலப்பதிகாரம் கூறும் இறைவழிபாட்டு மரபுகள்
அ. முத்துகிருஷ்ணன் 407

64. கம்பனில் வைணவ நெறி
முனைவர் சி. முத்துமாலை 411

65. தமிழ் இலக்கியத்தில் இறைநெறிகள்
க. முருகேசன் 419

# 60. இலக்கியத்தில் ஆழ்வார்களின் இறைநெறி

முனைவர் **பே. மகேஸ்வரி**
இணைப்பேராசிரியர்,
என்.ஜி.எம் கல்லூரி,
பொள்ளாச்சி.

## முன்னுரை

ஆழ்வார்களின் பிரபந்தம் இந்திய வைணவ இலக்கியத்தில் முதன் முதலில் உருவாக்கப்பட்ட சிறந்த வைணவ காவியமாகவும் பல்வேறு வைணவ சம்பிரதாயங்களின் தத்துவக்கருத்துக்கள் உருவாவதற்கான அடிப்படைக் களஞ்சிய நூலாகவும் புகழ்பெற்று விளங்குகிறது. ஆழ்வார்கள் முக்கியமாக பரம வைணவ பக்தர்களாக இருந்தனர். ஆவர்கள் தத்துவவாதிகள் அல்ல என்பதை நினைவில் கொள்ள வேண்டும். பக்தியின் மேன்மையை தங்களது பாசுரங்கள் மூலம் வெளிப்படுத்துவதே அவர்களின் வாழ்க்கையின் இலட்சியமாக இருந்தது.தத்துவங்களை அவர்கள் தங்களுடைய படைப்புகளில் ஆன்மீகக் கோட்பாடுகளாகவே வலியுறுத்தியுள்ளார்கள்.

பக்தியும் தத்துவமும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையது. புக்தியின் மேன்மையை வெளிப்படுத்தும் போது இறை, உயிர், மாயை, மோட்சம், பற்றிய தத்துவக்கருத்துக்களும் இயற்கையாகவே அமையக்காணலாம். தும் பிரபந்தத்தில் சொல்லியுள்ள ஆன்மீகக் கருத்துக்கள் ஒரு சிலவற்றை இக்கட்டுரையின் வாயிலாக விளக்கப்படுகிறது.

## இறைநெறி

இறைவன் மீது ஆழந்த பக்தி செலுத்தி அவனுடைய அற்புதமான குணாதிசயங்களைப் பற்றியும்வியக்கத்தக்க செயல்களைப்பற்றியும் பாடுவது இறைவனுடன் தொடர்புடைய பல்வேறு ஆன்மீகக் கருத்துக்ளை வெளிப்படுத்துவதே 'இறைநெறி' எனப்படும்.

ஆழ்வார்களுடையகாவியம் பக்தி பிரதானமானது.இறை பக்தியில் அவர்களுடைய இதயத்திலிருந்து எழுந்த பக்திப் பாசுரங்களின் தொகுப்பே நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம் என்னும் காவியமாக புகழ் பெற்றுத் திகழ்கிறது. இந்தியா உரு ஆன்மீக நாடாகும். பிரம்மஞானம் பற்றிய சிந்தனைகள் இங்கு பண்டைக்காலம் தொட்டு, துறவிகளாலும், ரிரி முனிவர்கள் மற்றும் மெய்யுணர்வாளர்களாலும் செய்யப்பட்டு வருகிறது. இதன் பிரதி பலனாக இந்துமதம், புத்த மதம், ஜைன மதம் போன்ற பல்வேறு சமயங்கள் இந்தியாவில் தோன்றின.

ஆழ்வார்களின் காலம், வைணவ ஆச்சாரியர்களின் காலத்துக்கு முற்ப்பட்ட காலமாகும். ஆழ்வர்களின் ஆன்மீகக் கருத்துக்ககள், பிற்க்காலத்தில் தோன்றிய வைணவ ஆச்சாரியர்களின் கவனத்தை ஈர்த்தன.

ஸ்ரீ நாதமுனி என்னும் வைண்வ ஆச்சாரியார் முதன் முதலில் ஆழ்வார்களுடைய பாசுரங்களைத் தொகுத்து நூல் வடிவில் பிரசுரம் செய்தார். ஆன்மீகச் சிந்தனைகளை பரம்பொருள், உயிர், பிரபஞ்சம், மாயை, மோட்சம் என்ற நிலையில் வெளிப்படுத்தினர்.

அனைத்து ஆழ்வார்களும் தங்களுடைய இ'ட தெய்வமான கிரு'ணனை, பரப்பிரம்மமான வி'ணுவின் அவதாரமாகச் சித்தரித்துள்ளார்கள். அவர் ஆதி அந்தமில்லாத புருசோத்தமர். இந்த பிரபஞ்சம் முழுவதுமுள்ள உயிரற்ற, உயிருள்ள பொருள்கள் அனைத்தும் தோன்றக் காரணமாக இருப்பவர். அவர் அருவமாகவும் உருவமாகவும் இருப்பவர் என்று போற்றிவுள்ளார்கள். படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களைப் புரியும் நாராயணன் நீ'தியை உணர்த்துகின்ற வேதங்களின் சாரமாகவும் விளங்குகின்றான். அவனே அனைத்துக்கும் ஆதியாகவும் காரணமாகவும் இருக்கின்றான் என்று குறிப்பிடுகின்றனர்.

**நம்மாழ்வார்**

நாராயணன் சர்வ வல்லமை படைத்தவன். அனைத்து தெய்வங்களுக்கும் தலைவன்: ஈடு இணையற்றவன்.

**நளிர் மதிச் சடையனும் நான்முகக் கடவுளும்**
**தளிரொளியிமையவர் தலைவனும் முதலா**
**யாவகை யுலகமும் யாவரும் அகப்பட**
**நிலம் நீர் தீ கால் சுடரிரு விசும்பும்**
**மலர் சுடர் பிறுவும் சிறிதுடன் மயங்க**
**ஒரு பொருள் புறப்பாடின்றி முழுவதும் அகப்படக் கரந்து**
**ஓர் ஆலிலைச் சேர்ந்த எம்பெருமா மாயனை யல்லது**
**ஒரு மாதெய்வம் மற்றுடையமோ யாமே?**

குளிர்ந்த சந்திரனை சிரசில் சூடியுள்ள சிவனும் நான்முகனும் (பிரம்ம தேவன்) ஒளி பொருந்திய தேவேந்திரனும் இம்மூன்று தெய்வங்களுக்கும் எம் பெருமான் தலைவனாவான். ஆனைத்து பிரபஞ்சங்களும், உயிரினங்களும் அவனும்கு உட்பட்டு அடங்குவனவாகும்.

புரளய காலத்தில் அவையாவும் எம்பெருமான் வயிற்றினுள்ளே அடங்கிக்கிடந்தன. ஆவை அனைத்தும் வெளியே தெரியாவண்ணம் தன் வயிற்றினுள் அவன் வைத்துக் காத்தான். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்து பூதங்களையும், சூரியன், சந்திரனையும் தம் வயிற்றில் அடக்கிக் கொண்டான். வானத்தில் காணப்படும் பிற ஒளிமிக்க பொருள்களையும் தன் வயிற்றில் மறைத்துக் கொண்டு ஆலிலை மீது பள்ளி கொண்டான். ஆந்த மாயப்பெருமானைத் தவிர மற்றொரு பெரிய தெய்வம் ஏதும் உண்டோ? வேறு தெய்வத்தை யாம் தொழ மாட்டோம்.

பிரம்மன் மற்ற உயிர்களைப் போன்று வளர்த்தல், இளைத்தல் ஆகிய விகாரங்களை அடைவதில்லை என்று கூறும் இவர்,

**தோய்வு இலன்: புலன் ஐந்துக்கும்**
**சொலப்படான்: உணர்வின் மூர்த்தி**
**ஆவி சேர் உயிரின் உள்ளால்**
**ஆதும் ஓர் பற்று இலாத**
**பாவனை அதனைக் கூடில்,**
**அவனையும் கூடலாமே**

உயிரற்ற உயிருள்ள பொருள்களில் எம்பெருமான் உள்ளுயிராய் இருந்து செயல்படுகிறான். உடலிலுள்ள உயிரானது தேய்தல், நரை, முப்பு ஆகிய விகாரங்களை அடையாமல் இருப்பதைப் போன்று, இறைவன் எந்த

மாற்றங்களையும் அடைவதில்லை. ஐம்புலன்களால் அறியப்படாதவனாய் எம்பெருமான் இருக்கின்றான். அந்த ஐம்பொறி உணர்வுகளுக்குக் காரண கர்த்தாவாக அவன் விளங்குகிறான் என்று தன் இறைநெறியை வலியுறுத்துகிறார்.

## திருமழிசையாழ்வார்

பரப்பிரம்மமாக உள்ளவன் ஸ்ரீமத் நாராயணன் ஒருவனே.

**தேருங்கால் தேவன் ஒருவனே என்றுரைப்பர்**
**ஆரும் அறியார் அவன் பெருமை-ஒரும்**
**பொருள் முடிவு மித்தனையே எத்தன் செய்தார்க்கும்**
**அருள் முடிவு தாழியான் பால்.**

ஞானிகளும் முனிவர்களும் நன்கு ஆராய்ந்து பரப்பிம்மமாக உள்ளவன். அவனுடைய பெரமையை ஒரவராலும் அறிய முடியாது. வேதங்களும் இதைத்தான் கூறுகின்றன. அவன் அருளால் மட்டும் தான் எப்படிப்பட்ட தவம் செய்தவர்களும இறுதியில் பலனைப் பெறுகின்றனர். நான்முகன், முக்கண்ணன், இந்திரன் ஆகிய தெய்வங்களுக்கும் . பரமபதத்தில் வாசம் செய்யும் நித்திய சூரியர்களுக்கும் ;ஸ்ரீமத் நாராயணனே அதிபதியாவார். அத்தெய்வங்களுடைய முடிவு காலத்தையும் அவனே நிர்ணயம் செய்கிறான். அதோடு பிரளய காலத்தையும் நிர்ணயம் செய்கிறார். இப்பேர்ப்பட்ட நாராயணனை அறிய வல்லார்யார்? ஏன்று தன் இறைநெறியைப் புலப்படுத்துகிறார்.

## பொய்கையாழ்வார்

இறைவன் ஒளிகளுக்கெல்லாம் ஒளி தரும் பொருளாய் விளங்குகிற:ன். ஆவன் உவமையற்றவனாய் விளங்குகின்ற ஒளியுருவனா:வான். உயிருள்ள பொருள் களிலும் உயிரற்ற பொருள்களிலும் இறைவன் கணந்தோறும் மாறுதல்களைத் தோற்றுவிக்கிறான். ஆனால், .இம்மாற்றங்களுக்கிடையே தான் என்றும் மாறாமல் இருக்கிறான். இறைவன் உயர்வர உயர்ந்தவனாயினும், அடியார்களுக்கு வழிபடுவதற்கும் அடைவதற்கும் எளியவனாயிருக்கிறான்.

**மண்ணும் மயலயம் மறிகடலும் மாருதமும்**
**விண்ணும விழுங்கியது மெய்யென்பர் எண்ணில்**

**அலகளவு கண்ட சீராழியாயிக்கு அன்றில்**
**உலகளவும் உண்டோ உன்வாய்?**

சிறிய திருவாயால் பெரிய உலகங்களையும், மலைகளையும், கடல்களையும், காற்றையும், வானத்தையும், விழுங்க முடியாதாகையால், உலகுண்ட அக்காலத்தில், அவைகளின் பரப்புக்கேற்றவாறு உன் வாயும் பெருத்திருந்ததோ?

யசோதை கண்ணனை நீராட்டும் போது, அவன் நாக்கை மஞ்சளால் வழித்தாள்.அப்போது அவன் திருவாயிலே உலகம் ஏழினையும் கண்டு வியப்புற்றாள்.

**கையும் காலும் நிமிர்த்துக் கடாரநீர்**
**பைய ஆட்டிப் பசுஞ்சிறு மஞ்சளால்**
**ஐயநா வழித்தாளுக்கு அங்காந்திட**
**ஐவயம் ஏழும் கண்டாள் பிள்ளை வாயுளே**

புரமபதமாய் நிலம், வானம், காற்று, நீர், நெருப்புமாகிய பஞ்ச புதங்களாய் விளங்கும் எம்பெருமான் கஜேந்திரனின் படுதுயரத்தை நீக்கிக் காத்தருளினான் என்று பொய்கையாழ்வார் கூறுவதிலிருந்து அவரது இறைநெறியை உணர முடிகிறது.

## திருப்பாணாழ்வார்

இறைவன் அமலன், விமலன், நிமலன் போன்ற பல விருகளால் போற்றிப் பாடியிருக்கிறார்.

**அமலனாதிபிரான் அடியார்க்கு என்னை ஆட்படுத்த**
**விமலன் விண்ணவர் கோன் விரையார் பொழில் வேங்கடவன்**
**நிமலன் நின்மலன் நீதிவானவன் நீள்**
**மதிளரங்கத்தம்மான் திருக்**
**கமலபாதம் வந்து என் கண்ணினுள்ளன ஒக்கின்றதே.**

பிரம்மன் பரிசுத்தமானவன். ஆவன் ஆதிபிரானாவான. அவன் விமலன். விண்ணவர்களுக்குத் தலைவன். நிமலன். நீதிவானவன். ஆழகான சோலைகளையுடைய திருமலையிலும் நீண்ட மதில் சுவர்களால் சூழப்பட்ட ஸ்ரீரங்கம் ஆலயத்திலும் வீற்றிருப்பான்.

பிறப்பு இறப்பு அற்ற இறைவன் தானாக வந்து இம்மண்ணுலகில் பிறந்து கொள்வது, அவன் தன்னுடைய பேரருளைக் காட்டுவதாகும். 'பிறப்பில் பல் பிறவிப் பெருமான்'

என்று நம்மாழ்வார் குறிப்பிடுகின்றார். இறைவன் பிறப்பற்றவன் என்றாலும் மனிதனாகவும் வேறு பல வடிவங்களிலும் மாயப்பிறவிகள் எடுக்கிறான். மனிதர்கள் உலகில் பிறப்பெடுப்பதற்கு அவர்கள் செய்த வினையே காரணமாகும். ஆனால் இறைவன் உலகில் பிறப்பதற்கு அவன் திருவருளே காரணமாகும். ஆவன் உடம்போடு வந்து பிறந்தாலும் அவனுக்கு யாதொரு குறைவும் நேர்வதில்லை புரநிலையில் இருக்கும் இறைவன் தன் பேரருளை உயிர்கள் கண்டுகொள்ளும் பொருட்டு அந்நிலையை விட்டு பூவுலகில் வந்து பிறக்கிறான். பாதாளத்தில் அழுந்திக் கிடந்த பூமியை திருமால் வராக அவதாரமாகத் தோன்றி தன் கொம்பினால் மேலே கொண்டுவந்து காத்தான். பிரகலாதன் பொருட்டு எடுக்கப்பட்டது நரசிம்ம அவதாரம். ஏங்கும் இறைவன் இருக்கிறான் என்று சொன்ன தன் மகனைச் சினந்து 'இங்கில்லை' என்று கூறி தூணை இரணியன் அடிக்க அங்கே அப்போதே சிங்கமாகத் தோன்றி அவனைக் கொன்றான்.

தேவர்களின் துயர் நீக்கும் பொருட்டு வாமனனாக வந்து குறைவுபடாமல் கொடுக்கும் மாபலி மன்னனிடம் மூவடி நிலம் வேண்டுமென்று கூறி வஞ்சனை செய்து தமது திருவடிகளால் உலகம் முழுவதையும் அளந்தான். திருமால் பரசுராமனாக அவதரித்து தமது தந்தையைக் கொன்ற அரச குலத்தவர் இருபத்தொரு தலைமுறையினரையும் கொன்று குவித்தார். இராமாவதாரம் இராவணனை அழிக்கும் பொருட்டு எடுக்கப்பட்ட அவதாரமாகும்.. சிறை யெடுக்கப்பட்ட சீதையை மீட்டு இராவணனைக் கொன்று, இலங்கையரசை மீண்டும் அவன் தம்பி விபீடணனுக்கு அளித்தவன். கம்சனை வதம் செய்யும் பொருட்டு எடுக்கப்பட்ட அவதாரம் கிருஷ்ண அவதாரம். கிருஷ்ணாவதாரத்தில் ஆழ்வார்களுடைய உள்ளம் அதிகம் ஈடுபட்டது. அதனாலேயே அவருடைய திருவிளையாடல்களை அதிகம் பாடியுள்ளனர்.

**விண்மீதிருப்பாய்! மலை மேல் நிற்பாய்! கடற்சேர்ப்பாய்!**
**மண்மீதுழல்வாய்! இவற்றுள் எங்கும் மறைந்துறைவாய்!**
**ஏண்மீதியன்ற புற அண்டத்தாய்! ஏனதாவி**
**ஊண்மீதாடி உருக்காட்டாதே ஒளிப்பாயோ!**

என்று எம்பெருமான் எழுந்தருளியுள்ள திருத்தலங்களைப் போற்றியிருப்பது போற்றுதற்குரியதாகும். புரத்துவம், வியுகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை என்பன இறைவனின் ஐந்து நிலைகளைக் குறிக்கின்றன. இறைவனின் அர்ச்சாவதாரத்தில் ஆழ்வார்களுக்கிருந்த ஈடுபாட்டைப் புலப்படுத்துவது அர்ச்சை வடிவம் அனைவரும் கண்டு வழிபடக்கூடிய நிலையாகும். எனவே, ஆழ்வார்களின் இறைநெறியை உணர்ந்து கொள்ள அவர்கள் வழிபட்டுப் போற்றிய அர்ச்சை நிலையே என்றால் அது மிகையாகாது.

## முடிவுரை

இறைவன் மீது பக்தி செலுத்தி அவனை அடைய வேண்டும் என்ற உன்னதமான இலட்சியத்துடன் ஆழ்வார்கள் வாழ்ந்தார்கள் என்பது அவர்களடைய வாழ்க்கை வரலாற்றிலிருந்து தெரிய வருகிறது. இறைவன் உயிர், பிரபஞ்சம், மாயை, மோட்சம், பக்தி ஆகியவைகளைப் பற்றிய உயர்ந்த பல அரிய தத்துவக் கருத்துக்களை அவர்களுடைய படைப்புகளில் கூறப்பட்டுள்ளன. சாதி வேறுபாடில்லாமல் எளியமுறையில் பக்தி முறைகளை வெளிப்படுத்தி மன அமைதியையும் மகிழ்ச்சியையும் அனுபவித்தனர். புக்தியின் எளிய பிரபத்தி மார்க்கம் ஆழ்வார்களால் தோற்றுவிக்கப்படடிருப்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது. ஆழ்வார்களின் பக்திப்பாடல்களில் துறவறம் பழிக்கப்படவில்லை. இல்லறம் வெறுக்கப்படவில்லை. யாக்கை நிலையாமை உணர்த்தப்பட்டுள்ளது. இல்லற வாழ்க்கையை மேற்கொண்டு உலக இன்பங்களை நுகர்ந்தவாறே தூய பக்தி மூலம் இறைவனை அடைய முடியும் என்ற உண்மையை ஆழ்வார்களின் படைப்புகள் உணர்த்துகின்றன. அவர்கள் போன்று இறைநெறியை வெளிப்படுத்தினால் மோட்சம் பெறலாம் என்ற உண்மையையும் உணர்ந்து கொள்ள முடிகிறது.

xxx